# பாடம் 28: திருத்தூதர்களின் நம்புகை

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (8 வயது) | : 1 முதல் 18 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (11 வயது) | : 1 முதல் 18 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (14 வயது) | : 1 முதல் 18 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், நமது மண்ணக வாழ்வின் முடிவில் ஒவ்வொரு மனிதரும் அனுபவிக்க நேரிடும் நான்கு இறுதி விடயங்கள் குறித்து நாம் கற்றோம். மீட்பு அடைவதற்கும் கடவுளோடு இருப்பதற்கும், கடவுளைக் குறித்து சரியானவற்றை நாம் நம்ப வேண்டும். இந்த பாடத்திலும் அடுத்ததிலும், மீட்படைய விரும்புகின்ற மக்களுக்குத் திருச்சபை வழங்குகின்ற நம்புகைகள் (நம்பிக்கை அறிக்கைகள்) பற்றி நாம் கற்போம். நமக்கு மிகவும் முக்கியமான நம்புகைகளாக உள்ளவை இரண்டு: திருத்தூதர்களின் நம்புகை (அதை இந்தப் பாடத்தில் நாம் கற்க இருக்கின்றோம்) மற்றும் நிசேயா நம்புகை (அதை அடுத்தப் பாடத்தில் நாம் கற்க இருக்கின்றோம்).

**தற்போதைய பாடம்:**
1. திருச்சபையின் தொடக்க நாட்களில் இருந்தே, கிறிஸ்தவர்கள் ஏற்கெனவே தாங்கள் நம்பியதை சொற்களில் வெளிப்படுத்த முயன்றுள்ளனர். இதன் காரணமாக, தொடக்கத்தில் இருந்தே, சிறப்பாக திருமுழுக்கிற்காகத் தயாரித்து வந்த வேட்பர்களுக்கு, கூற்றுத் தொடர்கள் (அல்லது வாய்பாடுகள்) வழியாக விசுவாசம் மக்களுக்கு கையளிக்கப்பட்டு வந்துள்ளது (கதிம 186).

*கதிம 187*: ‘‘கிறிஸ்தவர்கள் அறிக்கையிடும் விசுவாசத்தைப் பொழிப்பாகத் தருவதால், இத்தகைய தொகுப்புகள் ‘விசுவாச அறிக்கைகள்’ என்று அழைக்கப்படுகின்றன. லத்தீனில் முதல் சொல்லாக வரும் *க்ரேதோ* (‘நான் நம்புகிறேன்’) என்பதில் இருந்து, அவை ‘நம்புகைகள்’ என்று பெயர் பெறுகின்றன. ‘விசுவாச அடையாளங்கள்’ என்றும் அழைக்கப்படுகின்றன.’’

*கதிம 188*: ‘‘கிரேக்கச் சொல்லான *சிம்போலொன்* என்பதற்கு உடைந்தப் பொருளில் பாதி என்று பொருள், எடுத்துக்காட்டாக, ஒரு முத்திரையானது உய்த்துணரலின் ஒரு குறியலாக வழங்கப்படுகிறது. இந்த விசுவாசத்தின் அடையாளம், நம்பிக்கையாளர்கள் இடையிலான உய்த்துணரல் மற்றும் ஒன்றிப்பின் ஒரு குறியீடாக இருக்கிறது. *சிம்போலொன்* என்பதற்கு ஒன்றுகூடல், திரட்டு அல்லது பொழிப்பு என்றும் பொருள் உண்டு. விசுவாசத்தின் முதன்மை உண்மைகளின் பொழிப்பாக ஒரு விசுவாச அடையாளம் இருக்கிறது, ஆகவே மறைக் கற்பித்தலின் முதல் மற்றும் அடிப்படை ஆதாரமாக இது விளங்குகிறது.’’

2. எல்லா நம்புகைகளின் நடுவே, அவற்றில் இரண்டு கத்தோலிக்கத் திருச்சபையின் வாழ்வில் சிறப்பிடம் பெறுகின்றன. அவை, திருத்தூதர்களின் நம்புகை மற்றும் நிசேயா நம்புகை (கதிம 193-5).

3. திருத்தூதர்களின் நம்புகையானது இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களால் உருவாக்கப் பெற்றது என்று பலரால் நம்பப்படுகிறது. இந்த விசுவாச அறிக்கையின் உருவாக்கத்தில், யூதாசுக்கு மாற்றான மத்தியா உள்பட பன்னிரு திருத்தூதர்கள் பங்களித்திருக்க மிகுதியான சாத்தியம் இருக்கிறது. உலகெங்கும் கத்தோலிக்க விசுவாசத்தைப் போதிக்க எருசலேமை விட்டு அவர்கள் வெளியேறும் முன்பாக இது நடைபெற்றது.

சில தொடக்க எழுத்தாளர்களின் நடுவே, புனித அம்புரோம் மற்றும் ருபினுஸ் ஆகிய இருவர், பெந்தக்கோஸ்தின் பொழுது தூய ஆவியாரின் தூண்டுதலால் திருத்தூதர்களின் நம்புகையின் பன்னிரு பகுவைகளில் ஒன்றை திருத்தூதர்களில் ஒவ்வொருவராக எடுத்துரைத்தனர். (ருபினுஸ் ஒரு புனிதராக இல்லை என்றாலும், ஒரு பேரறிஞராகவும் மொழிபெயர்ப்பாளராகவும், கிரேக்கம் மற்றும் லத்தீனில் சிறந்தவராகவும் இருந்தார். நம்புகை குறித்து நீண்ட விளக்கவுரை எழுதிய முதல் கிறிஸ்தவ எழுத்தாளர் இவரே.)

திருத்தூதர்களின் நம்புகை பன்னிரு திருத்தூதர்களால் உருவாக்கப்பட்டதா என்பது குறித்து கத்தோலிக்கத் திருச்சபை அலுவல்சார் பார்வை எதையும் கொண்டிருக்கவில்லை. ஆனால், நம்புகையின் எல்லா கருத்துகளும் கத்தோலிக்க விசுவாசத்தின் பகுதி என்பதை நாம் முழு இதயத்தோடு நம்புகிறோம்.

4. திருத்தூதர்களின் நம்புகை தொடக்கத்தில் எழுதப்படவில்லை, மாறாக, மனப்பாடம் செய்து திரும்பக் கூறப்பட்டது. தொடக்கத் திருச்சபையின் வரலாறு முழுவதும் இவ்விதமாகவே விசுவாசம் கற்பிக்கப்பட்டு கற்கப்பட்டு வந்தது. புகுநிலையாளர்கள் (அதாவது, திருமுழுக்கு பெறுவதற்கு தயாரித்து வந்த மக்கள்) திருத்தூதர்களின் நம்புகையை மனப்பாடம் செய்து, தங்கள் திருமுழுக்கின்போது அதைச் சத்தமாக அறிக்கையிட்டனர்.

5. *கதிம 194*: ‘‘திருத்தூதர்களது விசுவாசத்தின் ஒரு நம்பகமானப் பொழிப்பாக இருக்கிறதென கருதப்படுவதாலே இது திருத்தூதர்களின் நம்புகை என்று சரியாக அழைக்கப்படுகிறது. இது ரோமைத் திருச்சபையின் பழங்காலத் திருமுழுக்கின் அடையாளமாக இருக்கிறது. இதன் பெரும் அதிகாரநிலை இந்த உண்மையில் இருந்து எழுகிறது: இது ‘திருத்தூதர்களில் முதல்வரான பேதுருவின் பீடமாகிய, அவரால் விசுவாசத்தைப் பெற்ற ரோமைத் திருச்சபையின் நம்புகையாக’ இருக்கிறது.’’
புனித அம்புரோஸ் (4ஆம் நூற்றாண்டு): ‘‘இந்த நம்புகை ஆன்மிக முத்திரையாகவும், நமது இதயத்தின் தியானமாகவும் மற்றும் என்றுமிருக்கும் காப்பாளராகவும் இருக்கிறது; கேள்விக்கு இடமின்றி, இது நமது ஆன்மாவின் புதையலாக இருக்கிறது.’’

6. திருத்தூதர்களின் நம்புகை:

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த
எல்லாம் வல்ல தந்தையாகிய
கடவுளை நம்புகின்றேன்.
அவருடைய ஒரே மகனாகிய, நம் ஆண்டவர்
இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன்;
இவர் தூய ஆவியால் கருவாகி,
கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார்;
பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு,
சிலுவையில் அறையப்பட்டு, இறந்து அடக்கம் செய்யப்பட்டார்;
பாதாளத்தில் இறங்கி,
மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்;
விண்ணகத்துக்கு எழுந்தருளி,
எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார்;
அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார்.
தூய ஆவியாரை நம்புகின்றேன்,
தூய கத்தோலிக்கத் திருச்சபையை நம்புகின்றேன்,
புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகின்றேன்,
பாவ மன்னிப்பை நம்புகின்றேன்,
உடலின் உயிர்ப்பையும்,
நிலை வாழ்வையும் நம்புகின்றேன்.
ஆமென்.

7. பகுவை 1 (கதிம 385-421): விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகின்றேன். கடவுள் இருக்கிறார், அவர் தூய திரித்துவமாக (ஒரே மூன்று ஆட்களாக) இருக்கிறார் என்பதை இது உறுதி செய்கிறது. காணப்படுகிற மற்றும் காணப்படாத உலகைக் கொண்டுள்ள அறியப்பட்ட ஒருங்கியத்தைப் (பிரபஞ்சம்) படைத்த அவர் இருக்கிறார்.

8. **பகுவை 2 (கதிம 421-455): அவருடைய ஒரே மகனாகிய, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன்.** இயேசு கிறிஸ்து கடவுளின் மகனாக இருக்கிறார், அதாவது மிக உறுதியாக அவர் இறைவனாக இருக்கிறார் என்பதற்கு இது சான்றிணைப்பாகும். ‘‘ஆண்டவர்’’ என்றச் சொல் இறைத்தன்மையைக் காட்டுகிறது, ஏனெனில் கிரேக்கத்தில் *கிரியோஸ்* மற்றும் எபிரேயத்தில் *அதொனாய்* ஆகிய இரண்டு சொற்களுமே கடவுளை மட்டுமே உரித்தான ‘‘ஆண்டவர்’’ எனும் பொருளைத் தருகின்றன. ஆகவே இயேசுவோடு ‘‘ஆண்டவர்’’ என்று

பயன்படுத்துவதன் பொருள், அவரது இறைத்தன்மையை அறிக்கையிடுவதாகும். இயேசு என்றப் பெயர் எபிரேயத்தில் *யெசுவ்* என்பதில் இருந்து வருகிறது, அதற்கு ‘‘மீட்டல், விடுவித்தல்’’ என்பது பொருள். கத்தோலிக்கராக, இயேசு இந்த உலகின் மீட்பர் என்று நாம் நம்புகிறோம்.

9. பகுவை 3 (கதிம 456-570): **இவர் தூய ஆவியால் கருவாகி, கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார்.** இது கிறிஸ்துவின் மனித இயல்பை உறுதி செய்கிறது, அவர் மெய்யாகவே உண்மை மனிதத் தாயைக் கொண்டிருந்தார் என்று பொருளாகிறது. இது அவரது இறை இயல்பையும் உறுதி செய்கிறது, தூய ஆவியாரின் வல்லமையால் பேறுநிறை கன்னி மரியாவின் கருப்பையில் கருவானதால், இவருக்கு மனிதத் தந்தை எவரும் இல்லை என்று பொருளாகிறது. ஆகவே அவர் கடவுளாகவும் மனிதராகவும், முழுமையான இறைவனும் முழுமையான மனிதருமாக இருக்கின்றார்.

10. பகுவை 4 (கதிம 571-630): **பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, இறந்து அடக்கம் செய்யப்பட்டார்.** கிறிஸ்துவின் மனித இயல்பு வலியை உணரவும் உண்மையில் இறக்கவும் முடியும், புனித வெள்ளியன்று அவர் கொடுமைக்கு ஆளாகி சிலுவையில் அறையுண்ட வேளையில் அவ்வாறு நிகழ்ந்தது. இறந்துபோன எல்லா மனிதரையும் போன்று அவரது உடலும் அடக்கம் செய்யப்பட்டது, அவரது உடல்சார் இறப்பு மெய்யானது என்பதே இதன் பொருள்.

11. பகுவை 5 (கதிம 631-658): **பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.** தமது இறப்பின்போது, இறந்தோரின் மெய்மத்திற்குள் இயேசு நுழைந்தார். மீட்கப்பட வேண்டியவர்களை விடுவிப்பதற்காக அவர் அந்த மெய்மத்திற்குள் நுழைந்தார், ஏனெனில் மீட்பருக்காகக் காத்திருந்த அவர்கள், இன்னும் கடவுளின் காட்சியைக் காணாமல் இருந்தனர். தாம் இறந்த மூன்றாம் நாளில், இயேசு உயிர்த்தெழுந்தார். சில நேரங்களில் இறந்த மக்கள் புத்தெழுச்சி பெற்ற விதத்தில், அவர் புத்தியங்கல் பெறவில்லை. தமது சொந்த வல்லமையில், மாட்சியுற்று எழுந்த உடலுடன் இயேசு உயிர்த்தெழுந்தார்.

12. பகுவை 6 (கதிம 659-667): **விண்ணகத்துக்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார்.** மனித உடலேற்பில் ஒன்றிணைந்த கிறிஸ்துவின் மனித மற்றும் இறை இயல்புகள் ஒருபோதும் பிரிக்கப்பட முடியாதவை என்பதை இந்த விண்ணேற்றம் விசுவாசிகளுக்கு நினைவூட்டுகிறது. மற்ற வார்த்தைகளில், மீட்பளிக்கும் இறப்பு மற்றும் உயிர்த்தெழுலுக்குப் பிறகு, இனிமேல் ஒருபோதும் அவருக்குத் தேவையற்றதாகவும் வேண்டாததாகவும் இருந்தாலும், இயேசு தமது மனித உடலை விட்டுவிடவில்லை. அவரது மனித உடல் என்றென்றும் இருக்கும் என்று நாம் நம்புகிறோம், மேலும் அவ்விதமாக, கடவுள் என்றென்றும் மனிதரோடு இணைந்திருக்கிறார். இயேசு உடலோடும் ஆன்மாவோடும் சென்ற விண்ணகத்திற்குள், ஒருநாள் பின்தொடர்வோம் என்று விசுவாசிகள் எதிர்நோக்குகின்றனர்.

13. பகுவை 7 (கதிம 668-682): **அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார்.** உலகின் முடிவில் அதனைத் தீர்ப்பிடுகிறவராக (நீதிபதியாக) இரண்டாம் வருகையில் கிறிஸ்து இருப்பார் என்பதை இந்த பகுவை உறுதி செய்கிறது. தீர்ப்பின் நாள், கணக்குத் தீர்க்கும் நாள், பேரழிவின் நாள் - இவையெல்லாம் பொதுத் தீர்ப்பு நிகழவிருக்கும் காலத்தின் முடிவுக்கான உருவகங்களாக இருக்கின்றன. எந்த மனிதரின் இறப்புக்கும் பிறகு, உடனடியாக தனித் தீர்ப்பு நிகழும், அந்நபர் நேரடியாக விண்ணகம், நரகம், அல்லது உத்தரிப்பகத்துக்கு (விண்ணகம் செல்வதற்குத் தயாரிக்கும் இடைநிலையான இடம்) செல்வார்.

14. பகுவை 8 (கதிம 683-747): **தூய ஆவியாரை நம்புகின்றேன்.** தந்தையாம் கடவுள், மகனாகிய கடவுள், தூய ஆவியாராகிய கடவுள் என மூன்று ஆட்களில் - தூய திரித்துவமாக - கடவுள் இருக்கிறார் என்பதை இந்த பகுவை நமக்கு நினைவூட்டுகிறது. தந்தையாம் கடவுளுக்கும் மகனாகிய கடவுளுக்கும் சமமான வேறு நபராகத் தூய ஆவியார் இருக்கிறார்.

15. பகுவை 9 (கதிம 748-750): **தூய கத்தோலிக்கத் திருச்சபையையும், புனிதர்களின் உறவு ஒன்றிப்பையும் நம்புகின்றேன்.** ஒரு கட்டடம் அல்லது ஒரு நிறுவனம் என்பதைத் தாண்டி திருச்சபை மேலானது என்று நாம் நம்புகிறோம். திருச்சபையானது வேறுபட்ட முகவங்களைக் கொண்ட கிறிஸ்துவின் மறையுடலாக இருக்கிறது. மண்ணகத்தில் இருக்கின்றத் திருச்சபையின் பகுதி ‘போராடும் திருச்சபை’ என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் அதன் உறுப்பினர்கள் இந்த உலகில் பாவத்திற்கு எதிராகப் போராடுகின்றனர். ‘துன்புறும் திருச்சபை’ என்பது கடவுளோடு ஒன்றிக்கத் தங்களைத் தயாரிப்பதில் உத்தரிப்பை அல்லது தூய்மையாக்கலை

அனுபவிக்கும் இறந்தோரின் ஆன்மாக்களைச் சுட்டுகிறது. 'வெற்றிபெற்றத் திருச்சபை' என்பது ஏற்கெனவே விண்ணகத்தில் இருக்கின்றத் தூய ஆன்மாக்களைச் சுட்டுகிறது. மண்ணகம், உத்தரிப்பகம் மற்றும் விண்ணகத்தில் இருக்கின்றத் திருச்சபை உறுப்பினர்களின் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பே புனிதர்களின் ஒன்றிப்பு என்று அழைக்கப்படுகிறது. நாம் ஒருசேர, ஒரே, தூய, கத்தோலிக்க, மற்றும் திருத்தூதுவத் திருச்சபையாக இருக்கிறோம்.

16. பகுவை 10 (கதிம 751-987): **பாவ மன்னிப்பை நம்புகின்றேன்.** உலகைப் பாவத்தில் இருந்து மீட்கவே கிறிஸ்து வந்தார். இயேசு தமது பாடுகள், தமது இறப்பு, மற்றும் தமது உயிர்த்தெழுதலால் செய்தப் பணியால் நாம் இவ்வாறு நம்புகிறோம், மேலும் அவரது மீட்புப் பணி திருச்சபையின் அருளடையாளங்களில் தொடர்கிறது, நமது பாவங்களுக்கான கடவுளின் மன்னிப்பை அனுபவிக்க நாம் சலுகை பெற்றுள்ளோம்.

17. பகுவை 11 (கதிம 989-1019): **உடலின் உயிர்ப்பை நம்புகின்றேன்.** ஒரு மனிதர் உடல் மற்றும் ஆன்மாவின் ஒன்றிப்பாக இருக்கிறார், ஆகவே இறப்பு என்பது உடல் மற்றும் ஆன்மாவை இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை பிரிக்கும் தருணமாக இருக்கிறது, அதைத் தொடர்ந்து இறந்தோரின் உயிர்த்தெழுதலும் பொதுத் தீர்ப்பும் நிகழும். மனிதர்கள் என்ற முறையில், நாம் இறந்தப் பிறகு வெறுமனே உடலற்ற ஆன்மாக்களாக நாம் இருக்கப் போவதில்லை. நாம் உயிர்த்தெழுந்த உடல்களைப் பெறுவோம், நம் ஆண்டவரின் இரண்டாம் வருகையின்போது நமது ஆன்மாக்களோடு அவை மீளொன்றிக்கும். நித்தியத்தின் நமது இறுதி அனுபவம், அது விண்ணகம் அல்லது நரகம் எதுவாக இருந்தாலும், அது உடல் மற்றும் ஆன்மாவின் ஒன்றிப்பு நிலையிலேயே நிகழும்.

18. பகுவை 12 (கதிம 1020-1065): **நிலை வாழ்வையும் நம்புகின்றேன்.** நமது மீட்பர் இயேசு கிறிஸ்து இறந்தது போன்றே, நாமும் இறப்போம். அவர் கல்லறையில் இருந்து எழுந்ததால், நாமும் அவ்வாறே எழுவோம். உடல்சார் இறப்பே இந்த வாழ்வில் இருந்து அடுத்ததற்கு நாம் கடந்து செல்ல ஒரே வழியாக இருக்கிறது. நமது உடல் இறந்த அதே கணத்தில், தனித் தீர்ப்பு நடைபெறுகிறது. தூயோராக, புண்ணியராகத் தீர்ப்பு பெறுகின்ற ஆன்மாக்கள் நேரடியாக அல்லது தூய்மையாக்கலை அனுபவித்தப் பிறகு விண்ணகத்தை அனுபவிப்பர். தீயோராகத் தீர்ப்பு பெறுகின்ற ஆன்மாக்கள் கடவுளிடம் இருந்து நித்தியத்திற்கும் பிரிக்கப்படுவர், இந்த அனுபவமே நரகம் என்று அழைக்கப்படுகிறது.